[2013 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று, பால் குளிரூட்டும் வசதி செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.*

திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 344, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

344—

பாலங்கள் கட்டுதல்

***9972—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், கடத்தூர் ஊராட்சி, ராஜ வாய்க்கால் மற்றும் சின்ன வாய்க்காலின் குறுக்கே பாலங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், கடத்தூர் ஊராட்சி, ராஜ வாய்க்காலின் குறுக்கே, சின்ன வாய்க்காலில் புதிய பாலம் அமைக்கப்படுமா என்ற கேள்வியை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டுமென்று, கண் துஞ்சாமல் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களை நாம் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் எண்ணுகின்றபோதே அந்தப் பணியை முடிக்கின்ற ஆற்றல், திறமை வாய்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில், இந்தப் பணி இப்போது முடியும் தருவாயில் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற பணி, பத்திரகாளியம்மன் கோயில் அருகில் ஒரு பாலம், கன்னாம்புத் துறை அருகில் ஒரு பாலம், கடத்தூர் ஊராட்சியிலிருந்து வாய்க்கால் கரைக்குச் செல்ல ஒரு பாலம் ஆகியவை இப்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், கடைமடைப் பகுதியிலே, இந்திரா நகரில் ஒரு பாலமும் மற்றும் பஞ்சாயத்து அலுவலகம் எதிரிலே ஒரு பாலமும் கட்ட தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு பாசனப் பருவத்திற்கு முன்னரே இந்தப் பணிகள் முடிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதும் கொடுக்கின்ற கீதையின் நாயகனைப் போல, தமிழக மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து, எல்லாருக்கும் எல்லாமும் தரும் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோரிக்கை வைக்கப்பட்டதும், உடனடியாக அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றியுள்ளது என்று கூறினார்கள். அந்தத் திட்டத்தை மட்டுமல்ல, நம்முடைய அமராவதி ஆற்றுப் பாசனத்திற்கு உட்பட்ட பகுதி, திருமூர்த்தி அணை பாசனத்திற்கு உட்பட்ட பகுதி. அனைத்துப் பகுதிகளிலுமே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கடந்த 2 ஆண்டுகளிலே பல கோடி ரூபாய் நிதியொதுக்கி பல்வேறு திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிக் கொடுத்துள்ளார்கள்.

திருப்பூர் மாவட்டம், கரூர் மாவட்டம், அதேபோல திண்டுக்கல் மாவட்டப் பகுதி, அமராவதி ஆற்றுப் பாசனத்திற்குட்பட்ட அனைத்துப் பாசன விவசாயிகள் சங்கத் தலைவர்களும் மகிழ்ச்சியடையக்கூடிய வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனைத்துத் திட்டங்களுமே நமக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல, திருமூர்த்தி, அமராவதி அணைகளையும் தூர்வாரக்கூடிய திட்டமும் நடைமுறையிலே இருக்கிறது என்று கூறினார்கள். அதையும் உடனடியாகச் செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டு, அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்றி முடித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 345, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.லோ. ரமேஷ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

345—

கால்நடை மருத்துவமனை

***6970—திரு. கா.லோ. ரமேஷ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, புதூர்நாட்டில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?